(6 pages) **Reg. No. : ......................................**

**Code No. : 12113** **Sub. Code : R 4 TA 31/ B 4 TA 31**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2012.

Third Semester

Tamil — Allied

Paper III — பெண்ணியம்

(For those who joined in July 2008 and afterwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுதுக.

1. தேசிய ஓட்டுரிமை அமைப்பினைத் தோற்றுவித்தவர்

(அ) சூசன் ஆண்டனி (ஆ) ஆலிஸ் பால்

(இ) சூசன் லா∴பால்ட் (ஈ) டைகிரேஸ்

2. மரபணு பொறியியலை எதிர்க்கும் பெண்ணியத்தின் பெயர்

(அ) கலாச்சாரப் பெண்ணியம்

(ஆ) கிறிஸ்தவப் பெண்ணியம்

(இ) சூழல் பெண்ணியம்

(ஈ) ஆன்மீகப் பெண்ணியம்

3. குடும்ப அமைப்பைப் போற்றும் பெண்ணியம் எது?

(அ) கிறிஸ்தவப் பெண்ணியம்

(ஆ) மிதவாதப் பெண்ணியம்

(இ) தலைமைத்துவம் வேண்டாப் பெண்ணியம்

(ஈ) கலாச்சாரப் பெண்ணியம்

4. "பெண்பற்றிய பிம்பம் ஆண்களால் உருவாக்கப்பட்டது" என்ற கருத்தினைக் கூறியவர்

(அ) மரியா மைஸ் (ஆ) கேட் மில்லட்

(இ) எச்.ஆர் ஹேய்ஸ் (ஈ) ஜசன்ஸ்டீன்

5. சிவில் விவாகச் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

(அ) 1870 (ஆ) 1875

(இ) 1872 (ஈ) 1874

6. பெண்களுக்கு மதக் கல்வி தேவையில்லை என்று கூறியவர்

(அ) பூலே (ஆ) அண்ணா

(இ) பெரியார் (ஈ) ஜானம்மாள்

7. பெண் எழுத்துதிற்குத் தேவையானது

(அ) அடக்கம் (ஆ) எழுத்து கூச்சமின்மை

(இ) நாகரிகம் (ஈ) மரபுமீறாமை

8. பெண் மொழி உருவாக வேண்டும் என்று பேசியும் எழுதியும் வந்தவர்

(அ) வ.ரா (ஆ) பாரதியார்

(இ) பெரியார் (ஈ) திரு.வி.கா

9. ''எதிர்ப்பு கேட்பாடு'' என அறியப்படுவது

(அ) நவீனத்துவம் (ஆ) இருப்பியல் வாதம்

(இ) மெய்மையியல் (ஈ) பின்நவீனத்துவம்

10. இல்லத்தில் பெண்ணின் இயங்குவெளியாக அமையும் இடம்

(அ) முற்றம் (ஆ) முன்கட்டு

(இ) பின்கட்டு (ஈ) வரவேற்பறை

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

11. (அ) ''செனகா பால்ஸ் மாநாடு'' பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) ''சமதர்ம பெண்ணிய வாதம்'' என்றால் என்ன? விளக்குக.



12. (அ) இங்கிலாந்தில் முதன் முதலில் பெண்ணுரிமைக்காக ஒலித்த குரல் பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) தந்தை வழிச் சமூக அமைப்புக்கும் பெண்ணடிமைத் தனத்திற்கு முள்ள உறவினை வெளிப்படுத்துக.

13. (அ) கிறிஸ்தவ மதம் இந்தியாவில் பெண்ணிய எழுச்சியை எவ்வாறு தாண்டியது?

(அல்லது)

(ஆ) ''சிப் ஹோ'' இயக்கம் என்றால் என்ன? விளக்குக.

14. (அ) பெண்ணிய எழுத்தாளர்களாக இனங்காணப்பட்ட ஆங்கில, தமிழ் படைப்பாளிகளையும், அவர் படைப்புகளையும் பட்டியலிடுக.

(அல்லது)

(ஆ) ''குடும்பத்தில் ஆணின் அடக்குமுறைகளையே பெண் எழுத்துக்கள் வெளிப்படுத்துகின்றன'' என்ற கருத்தின் நிறை குறைகளை விளக்குக.

15. (அ) இல்லம் மூச்சு முட்டும் இடமாகவும், சிறையாகவும் அமைகிறது என்ற எதிர்ப்புக்குரல்கள் எவ்வாறு இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(அல்லது)

(ஆ) பெண்ணிய நோக்கில் இராமயணச் சீதையில் மீட்டுருவாக்கம் பற்றி எழுதுக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

16. (அ) இங்கிலாந்தில் பெண்ணியத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) தாராளப் பெண்ணியம் குறித்து கட்டுரை வரைக.

17. (அ) பெண்ணடிமைத்தனத்துக்கும் தந்த வழி சமூக அமைப்புக்கும் உள்ள தொடர்பினை விவரி.

(அல்லது)

(ஆ) 'இரண்டாம் பால்' என்ற நூலில் பெண்ணுரிமை எவ்வாறு வலியுறுத்தப்படுகிறது.

18. (அ) இந்து மதச் சீர்திருத்த இயக்கங்கள் பெண் விடுதலைக்கு எவ்வாறு உதவின? விவரி.

(அல்லது)

(ஆ) பெண்கள் மேற்கொண்ட பெண் விடுதலைப் போராட்டங்கள் சமூக நலத்திற்கான போராட்டங்களாக வளர்ந்தமை குறித்து எழுதுக.

19. (அ) பண்பாட்டு மரபுகளை எதிர்க்கும் பெண்குரல்கள் பண்டைய தமிழ் இலக்கியங்களிலும் ஒலித்துள்ளன என்பதனைச் சான்றுகாட்டி நிறுவுக.

(அல்லது)

(ஆ) "பெண்ணின் இயங்கு தளம்" என்னும் பொருள் குறித்து கட்டுரை வரைக.



20. (அ) பெண்ணியப் பார்வை 'இராமன்' என்னும் இலக்கிய நாயகன் பற்றிய மரபு கோட்பாடுகளின் மீது ஏற்படுத்தும் மாற்றங்களை எழுதுக.

(அல்லது)

(ஆ) "பெண்ணிய இலக்கியத் திறனாய்வு" என்பதனை விளக்குக.

---